[1978 பிப்ரவரி 28

மரவள்ளிக்கிழங்குக்கு நியாய விலை.

*318 வினா : திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் மன்னார்குடி, பரவாக்கோட்டை, மேலவாசல் பகுதியில் பயிரிடப்படும் மரவள்ளிக்கிழங்குக்கு நியாயமான விலை கிடைக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இந்தப் பகுதிகளில் மரவள்ளிக்கிழங்கு பயிரிடப்படும் விஸ்தீரணம் 95 ஏக்கர் மட்டுமேயாகும். விற்பனையில் எந்தவித கஷ்டமும் இல்லாததால் நடவடிக்கை யாதும் மேற்கொள்ளப்படவில்லை.

திரு. துரை கோவிந்தராசன் : மன்னார்குடி பகுதியில் அதிகமாக மரவள்ளிக்கிழங்கு உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கு ஊக்கமளிக்கிற வகையில்—தஞ்சை மாவட்டத்தில் வேறு தொழிற்சாலைகள் இல்லையென்ற காரணத்தாலும்—அங்கு விவசாயிகள் உற்பத்தி செய்கிற மரவள்ளிக்கிழங்கை கோவைக்கு எடுத்துச் சென்று அவர்கள் விற்பனை செய்ய வேண்டிய நிலை இருக்கிறது—மரவள்ளிக்கிழங்கைக் கொண்டு பல பொருள்கள் தயாரிக்கிற ஒரு ஆலையை மன்னார்குடி பகுதியில் நிறுவ அரசு உத்தேசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஒரு தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டுமென்றால் அதற்குத் தேவையான மூலப் பொருள் போதிய அளவிற்குக் கிடைக்க வேண்டும். அப்படி மூலப் பொருள் கிடைத்தால், அந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்குண்டான சாத்தியக்கூறுகள் இருந்தால் இந்த அரசு உடனடியாகப் பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வத்தலக்குண்டு பழம் பதனிடும் தொழிற்சாலை.

*319 வினா : திரு. கே. பண்ணை சேதுராம் : மாண்புமிகு கைத்தறி—பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வத்தலக்குண்டுவில் கூட்டுறவுத் துறையில் அமைக்கப்பட்ட பழம் பதனிடும் தொழிற்சாலை தற்பொழுது செயல்படுகிறதா?

(ஆ) இல்லை எனில், காரணம் என்ன ?